இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 89 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 22 – ஞாயிற்றுக்கிழமை 08 நவம்பர் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 89 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 22- Sunday 08 November 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

விவரம் தெரியாமல் டம்மி முதல்வர் அறிக்கை! அடடே இந்த பொம்மை பேசுமா?

பெரியார் அறிவுலகத்துக்கு 'போலி புத்தகங்கள்' வாங்கப்பட்டது எப்போது?

முதலமைச்சர் விஜய்க்கு தி.மு.க. சமூக வலைத்தளப் பதிவில் பதிலடி!

சென்னை, நவ.8 –

'பெரியார் அறிவுலகத்தில் அகல் விளக்கு மற்றும் பீனிக்ஸ் பதிப்பகத்தின் போலியான நூல்களில் மட்டும் ஜூன் மாதம் என்று முத்திரை இடப்பட்டுள்ளது.


அப்படியென்றால் போலி பதிப்பக புத்தகங்கள் எப்போது வாங்கப் பட்டன? யார் முடிவு எடுத்தது? த.வெ.க. ஆட்சியில் யாருக்கு கமிஷன் போனது?' என்று தி.மு.க. கேள்வி எழுப்பியுள்ளது.

இது குறித்து தி.மு.க. தமது அதிகாரப்பூர்வ எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "இடைத்தேர்தல் பிரச்சாரம் மற்றும் தேர்தல் முடிவுக்கு (அக்.9) பிறகு த.வெ.க. தலைவர், டம்மி முதல்வர் அதிகாரப்பூர்வ பக்கத்தில் இருந்து வந்திருக்கும் பதிவு 'அடடே இந்த பொம்மை பேசுமா?' என ஆச்சரியமளிக்கிறது.

விலைவாசி உயர்வு குறித்து மௌனம் காக்கும் முதல்வர்!

விலைவாசி உயர்வு குறித்து பதிவு இல்லை. கொலைகள் குறித்து கவலை யில்லை. காணாமல் போன சிறுமி குறித்து விசாரிப்புகள் இல்லை. மின் வெட்டு, மின் கட்டணம் குறித்தெல்லாம் எந்த வாக்குறுதியும் இல்லை. அவ்வளவு ஏன் அரசின் அசமஞ்சத்தால் கடலில் இறந்து மிதந்த மீனவர்கள் குறித்து கூட பதிவு இல்லை.

ஆனால், தி.மு.க. தலைவர் கோவை பெரியார் அறிவுலகம் சென்றதும், அவருக்கு கிடைத்த பாராட்டும் பேசுபொருளானதும், புத்தக கொள் முதலில் ஊழல் என்று ஓடி வந்திருக்கிறார் த.வெ.க. தலைவர்.





போலி பதிப்பகங்களில் புத்தகம் வாங்கல்!

பெரியார் அறிவுலகத்தில் அகல் விளக்கு மற்றும் பீனிக்ஸ் பதிப்பகத்தின் போலியான நூல்களில் மட்டும் ஜூன் மாதம் என்று முத்திரை இடப்பட்டுள்ளது என்று அங்கிருப்பவர்கள் தெரிவிக் கிறார்கள். அந்த தேதி கூட டம்மி முதல்வருக்கு பிறந்தநாள் தான்.

அதே பெரியார் அறிவுலகத்தில் உள்ள 'வால்காவில் இருந்து கங்கை வரை' போன்ற புகழ்பெற்ற மற்ற பதிப்பக நூல்கள் தி.மு.க. ஆட்சியின் மார்ச் மாத முத்திரை யோடு உள்ளன. அப்படியென்றால் போலி பதிப்பக புத்தகங்கள் எப்பொழுது வாங்கப் பட்டன? யார் முடிவு எடுத்தது? த.வெ.க. ஆட்சியில் யாருக்கு கமிஷன் போனது?

திரிஷா விஜய் - விஜய் பாலு - பெயரில் புத்தகங்கள்!

கடந்த ஆட்சியில் நூலகங்களுக்கு புத்தகங்கள் வாங்குவதில் எந்த விதமான ஒளிவு மறைவுமின்றி வெளிப் படையான முறையில் புத்தகங்களை கொள்முதல் செய்யப் பட்டது என்பதை பதிப்பாளர்களே அறிவர்.

தி.மு.க. ஆட்சியில் புத்தகத் தேர்வுக் குழுவில் இருந்த எழுத்தாளர் ஒருவர், த.வெ.க. ஆட்சியமைந்த ஆறு மாதங் களுக்குப் பிறகு நூலகத்தில் உள்ள புத்தகங்களின் பெயர்களையும் திரிஷா விஜய், விஜய் பாலு, விஜய் செல்வம், விஜய் ஆதித்தன், சுமேகா விஜய் என்ற 'எழுத்தாளர்களின்' பெயர்களையும் பார்த்து பதறிய பிறகுதான் அரசுக்குத் தெரிந்ததா? அல்லது எந்த விவரமும் தெரியாமல் தான் டம்மி சி.எம். அறிக்கை விட்டு இருக்கிறாரா?' என அந்தப் பதிவில் தி.மு.க. விமர்சித்துள்ளது.

முன்னதாக, "கோவை பெரியார் அறிவுலகம் உள்ளிட்ட புதிய நூலகங் களுக்கான நூல் பரிந்துரைக் குழு கடந்த தி.மு.க. ஆட்சியில் அமைக்கப்பட்டது. அக்குழுவில் இடம்பெற்றிருந்த பெருமாள் முருகனே, பெரியார் அறிவுலகத்துக்கு நூல் கொள்முதல் செய்யப்பட்டதில் ஊழல் நடந்துள்ளதை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளார்" என்று முதல்வர் விஜய் தெரிவித்திருந்தது கவனிக்கத்தக்கது.

'டெட்ராய்ட் மாநிலம்' என்ற பெயரை தமிழ்நாடு முழுவதுமாக இழந்தது!

'கியா' வாகன தயாரிப்பு நிறுவனம் - ஆந்திராவில் 1.5 பில்லியன் டாலர் முதலீடு!

'ரீல்ஸ்' த.வெ.க. ஆட்சியால் தமிழ்நாட்டுக்குப் பின்னடைவு!

ஜதராபாத், நவ.8 –

த.வெ.க. ஆட்சியில் டெட்ராய்ட் மாநிலம் என்ற பெயரை தமிழகம் முழுவதுமாக இழந்துள்ளது. உலகின் மிகப்பெரிய வாகன தயாரிப்பு நிறுவனமான கியா தனது நிறுவனத்தின் ஒன்று புள்ளி 5 பில்லியன் டாலர் முதலீடுகளை ஆந்திராவில் மேற்கொள்ளவும் முடிவு செய்துள்ளது.

தி.மு.க. ஆட்சியில் இந்தியா வின் டெட்ராய்ட் ஆக கார் உற்பத்தி துறையில் சென்னை அபார வளர்ச்சி பெற்றது. கடந்த திராவிட மாடல் ஆட்சியில் பொருளாதாரம், தொழில்துறை அனைத்திலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்ந்தது. த.வெ.க. அரசு பொறுப் பேற்றதிலிருந்தே அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு பின் னோக்கி செல்ல தொடங்கியுள் ளது. ஹூண்டாய் – கியா நிறுவ னங்களுக்கு வாகன உதிரி பாகங்கள் வழங்கும் ஹ்வாஷின், சியோயான் மற்றும் இவாமெட் ஆகிய மூன்று நிறுவனங்கள், ஆந்திராவில் முதலீடு செய்ய முடிவு செய்துள்ளன. இந்நிலை யில், இதற்கெல்லாம் பேரிடியாக த.வெ.க. ஆட்சியில் டெட்ராய்ட் மாநிலம் என்ற பெயரை தமிழகம் முழுவதுமாக இழந்துள்ளது தெரியவந்துள்ளது. தென்கொரிய முன்னணி வாகன நிறுவனமான கியா ஒன்று புள்ளி 5 பில்லியன் டாலர் முதலீட்டை ஆந்திர மாநி லம் பெற்றுள்ளது.

ரீல்ஸ்க்கு நேரம் ஒதுக்கும் தொழில்துறை அமைச்சர் கீர்த் தனா தனது துறையில் கவனம் செலுத்தாமல் உள்ளதே தொழில் துறையில் தமிழ்நாடு பின்தங்கிப் போனதற்குக் காரணம் என தொழில் முனைவோர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஆந்திராவின் அனந்தபூர் ஆலையில் கியா நிறுவனம் தனது உற்பத்திச் செயல்பாடுகளை விரி வாக்கம் செய்யத் திட்டமிட்டுள்ளது. அனந்தபூர் ஆலையில் முன் மொழியப்பட்டுள்ள இந்த விரிவாக் கத்தில், ஒரு புதிய உற்பத்திப் பிரி வும் அடங்கும். இதன் மூலம் ஆண்டு உற்பத்தித் திறனை 3 லட்சம் வாகனங்களிலிருந்து 5 லட்சம் வாகனங்களாக உயர்த்த வாய்ப்புள்ளது. இது தொடர்பாக அடுத்த வாரம் விசாகப்பட்டினத்தில் நடைபெறும் ஆந்திர முதலீட்டு மாநாட்டில் அதிகாரப்பூர்வ அறி விப்பு வெளியாகும் என எதிர்பார்க் கப்படுகிறது.

மேலும், புரிந்துணர்வு ஒப்பந்த மும் கையெழுத்தாக வாய்ப்புள் ளது. தென் கொரியாவைச் சேர்ந்த மூன்று வாகன உதிரிபாக உற்பத் தியாளர்களும் திராவிட மாடல் ஆட்சியில் பேச்சுவார்த்தை மேற் கொண்டது. ஏற்கனவே, த.வெ.க. அரசின் செயலற்ற தன்மையால் ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டை இழந்து, வாகன உதிரிபாக நிறுவ னங்கள் ஆந்திர அரசுடன் புரிந்து ணர்வு ஒப்பந்தங்களில் கையெ முத்திட்டுள்ள நிலையில், தற்போது ஒன்றரை பில்லியன் டாலர் முதலீட்டையும் ஆந்திர அரசு தட்டிச் சென்றுள்ளது.

முதலமைச்சர் விஜயின் நிர் வாகத் திறமையற்ற நடவடிக்கை களால், தமிழகம் வாகன உற்பத் தியில் முதன்மை மாநிலம் என்ற பட்டியலில் இருந்து பின்னுக்குத் தள்ளப்பட்டு வருவதாக பொருளா தார நிபுணர்கள் கவலை தெரிவித் துள்ளனர்.

அதிகாரத்தை கையில் வைத்துள்ள முதலமைச்சர்

வெற்று அறிக்கையை வெளியிட்டு குறுகிய அரசியல் செய்வதா?

முன்னாள் அமைச்சர் கோவி. செழியன் அறிக்கை!

கோவை, நவ.8 –

"பெரியார் அறிவுலகப் புத் தக முறைகேடு குற்றச்சாட்டு தொடர்பாக அதிகாரத்தைக் கையில் வைத்துள்ள முதல மைச்சர் வெற்று அறிக் கையை வெளியிட்டு குறுகிய அரசியல் செய்யக் கூடாது!" என்று முன்னாள் அமைச்சர் கோவி.செழியன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வரு மாறு:-

கோவை பெரியார் அறிவு லகத்தில் இடம்பெற்றுள்ள சில நூல்கள் தவறான தகவல்க ளையும் பிழையான வரலாற் றையும் உள்ளடக்கியதாக இருப்பதையும், அப்புத்தகங்க ளின் வெளியீட்டாளர்கள் மற் றும் அதன் எழுத்தாளர்களின் பெயர் மற்றும் முகவரிகள் போலியாக இருப்பதையும் எழுத்தாளர் பெருமாள் முரு கன் அவர்கள் தான் எழுதிய கட்டுரை ஒன்றில் வெளிச்சம் போட்டுக் காட்டியிருந்தார்.

இதை தங்களது அரசியல் அருவெறுப்புக்கு பயன்படுத் தப் பார்க்கிறது த.வெ.க.

எதற்கெடுத்தாலும் தி.மு.க. வைக் குற்றம் சொல்லியே பழக்கப்பட்ட த.வெ.க. அர சைச் சேர்ந்த பள்ளிக்கல்வித் துறை அமைச்சரும் தி.மு.க. மீது புழுதி வாரி இறைப்ப



தற்கென்றே செயல்படும் அக் கட்சியின் "Virtual Abusers" கூட்டமும், வழக்கம்போல் பழியைத் தூக்கி தி.மு.க. மீது போட்டுவிடலாம் என்று செயல்பட்டனர்.

இதில் அதிர்ச்சியான ஆச்சர் யம் என்ன என்றால், இது வரை சட்டம்ஒழுங்கு, விலை வாசி உயர்வு, மின்கட்டண உயர்வு உள்ளிட்ட எந்தப் பிரச் சினைக்கும் வாய்த்திறக்காத முதலமைச்சரும் அதிசயமாய் அறிக்கை வெளியிட்டுள்ளார்; மக்களைத் திசைத்திருப்ப இது பயன்படும் என்ற நப்பாசையால்!

முதலமைச்சர் என்ற பொறுப்பில் இருந்துகொண்டு, நொடிப்பொழுதில் அரசின் அத் தனை ஆவணங்களையும் ஆய்வு செய்யும் அதிகாரத்தை யும் கொண்டுள்ள விஜய் அவர்கள், பெரியார் அறிவுல கப் புத்தகங்கள் வாங்கியது தொடர்பான சர்ச்சை வெளி யானதும் அது குறித்து முறை யாக ஆய்வு செய்திருக்க வேண்டும். அதை அவர் பொறுப்புடன் செய்ததாகத் தெரியவில்லை.

நூலகங்களுக்கு வாங்கப் படும் நூல்கள் தரமானவை யாக இருக்க வேண்டும். அவற்றில் வெளிப்படைத் தன்மை பேணப்பட வேண் டும் என, "வெளிப்படையான நூல் கொள்முதல் கொள் கையை" முதலில் உருவாக்கி யதே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதை மறைத்துவிட்டு த.வெ.க. வினர் பரப்புவது அவதூறு மட்டுமே.

கோவையில் அமைய வுள்ள மாபெரும் நூலகத்தில் தரமான நூல்கள் இடபெற வேண்டும் என மதிப்புமிக்க எழுத்தாளர்களையும் கல்வி யாளர்களையும் உள்ளடக்கிய நூல் பரிந்துரைக் குழுவினை கடந்த தி.மு.க. ஆட்சியில் அமைத்தோம். புத்தக முறை கேட்டை வெளிகொண்டுவந்த கட்டுரையை எழுதிய எழுத்தா ளர் பெருமாள் முருகன் அவர் களே, அந்த நூல் பரிந்துரைக் குழுவில் இடம்பெற்றிருந்த வர்தான்.

தமிழ்நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான நூலகங் களை உருவாக்கி, இந்திய ஒன்றியமே வியந்து பார்க்கும் வகையில் அண்ணா நூற் றாண்டு நூலகம், கலைஞர் நூற்றாண்டு நூலகம் உள்ளிட்ட நூலகங்களை அமைத்த தி.மு.க.வின் திட் டங்களில் இதற்குமுன் இப்ப டிப்பட்ட குறைகள் ஏதாவது எழுந்துள்ளனவா?

ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, தி.மு.க.வின் திட்டங்களைச் சிதைப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயல்படும் த. வெ.க. ஆட்சியில் இத்தகைய செய்தி வந்திருப்பதால், இதில் உள்நோக்கம் ஏதும் உள் ளதோ, சதிச் செயல்கள் ஏதும் உள்ளனவோ என்று கருத வேண்டியிருக்கிறது. குறிப்பிட்ட புத்தகங்கள், அதனை எழுதிய எழுத்தாளர் கள், அனுமதி பெற்ற பதிப்ப கங்கள் ஆகியவற்றின் பின் னணி வெளிப்படையாக அறிவிக்கப்பட வேண்டும்.

எனவே, வழக்கம் போல் தி.மு.க. தி.மு.க. என்று சொல் லாமல், சுதந்திரமான அமைப் பைக் கொண்டு விசாரணை நடத்தப்பட வேண்டும். இந்த முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது சட்ட ரீதியான நடவ டிக்கை அவசியம் என்பதே தி.மு.கழகத்தின் நிலைப்பாடு.

இவ்வாறு அவர் அறிக்கை யில் கூறியுள்ளார்.